2007 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே சாத்தனூர் அணை மூலமாக வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்தித்தான் 7.5 மெகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த நீர்வீழ்ச்சியில், எத்தனை காலத்திற்குத் தொடர்ந்து தண்ணீர் விழுந்துகொண்டிருக்கும், அதன்மூலம் எவ்வளவு மின்சாரம் தயாரிக்கப்படும் என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்ய வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அது குறித்து, அதிகாரிகளை அனுப்பிவைத்து ஆய்வு செய்து, குறைந்தது ஓர் ஆறு மாத காலத்திற்காவது அந்த நீர்வீழ்ச்சியிலே தண்ணீர் வருமானால், அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

113—

தனிச் சந்தை

***16814—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்து தனிச் சந்தையை ஏற்படுத்தி, விவசாயிகள் உபரி வருமானம் ஈட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்து உரிய சான்றுகள் வழங்க தமிழகத்தில் தனித் துறை ஒன்று தொடங்க தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. இதற்குரிய பிரேரணைகள் விதைச் சான்றளிப்புத் துறைமூலம் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

[2007 ஏப்ரல் 23

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாவட்டந்தோறும் வேளாண்மைத் துறை வழியாக, பூச்சி மருந்து உரங்கள் தரமானதா என ஆய்வு செய்ய, துறை வழியாக ஆய்வுக் கூடம் உள்ளது. ஆனால், இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்ய ஆய்வுக் கூடங்கள் எதுவுமில்லை. இன்றைக்கு மகாராஷ்டிராவில் இதைப்போன்ற ஆய்வுக் கூடங்கள் அரசுத் தரப்பிலே ஏற்படுத்தி, அதன் வாயிலாக residual effect எனச் சான்றுத் துறை வழியாகத் தர நிர்ணயம் செய்து இயற்கை உரங்களால் உற்பத்தி செய்யப்படும் .நெல், மிளகாய், மா, தக்காளி, கொய்யா, சப்போட்டா, மாதுளை மற்றும் இயற்கை முறையிலான முட்டை, பால் போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு, அதிக விலை கிடைக்கிற வகையில், அந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, இங்கும் இயற்கை உரங்கள்மூலம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதி உதவியும், மாநில அரசின் நிதியும் சேர்த்து இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தர நிர்ணயம் செய்ய தமிழகத்திலே ஒரு தனித் துறை ஒன்றைத் தொடங்கவும், இதன் தொடர்பாக மத்திய அரசின் அங்கீகாரம் பெற்று உலகத் தரத்திற்குச் சமமாக அங்ககச் சான்றுப் பணிகளைத் தறசமயம் தமிழகத்தில் இயங்கி வரும் விதை சான்றளிப்புத் துறை கூடுதலாக மேற்கொள்ளும். நடபபு ஆண்டில் 2007–2008 ஆம் ஆண்டில், இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குத் தர நிர்ணயம் செய்ய வழிவகை செய்யும் முறையை அமல்படுத்த தற்போதைய விதைச் சான்று துறை, விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத் துறை என மாற்றப்பட உள்ளது. இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளின் உற்பத்தி உரிய முறைப்படி பதிவு செய்யப்பட்டு அவர்களின் பொருட்களுக்கு உலகத் தர அங்ககச் சான்று வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சமீப காலமாக இயற்கைவழி வேளாண்மை குறித்து, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. தேசிய தோட்டக் கலை இயக்கத்தின்கீழ் வரும் நிதியாண்டில் 9,500 எக்டேர் நிலப் பரப்பளவில்

2007 ஏப்ரல் 23]

இயற்கை வேளாண்மை மேற்கொள்ளும் விவசாயக் குடும்பங்களுக்கு தேசிய தோட்டக் கலை இயக்க நிதியிலிருந்து ரூ. 9.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட பயிர்களுக்குச் சான்று வழங்க, ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தற்போது சில விவசாயிகள் இயற்கை உரங்கள்மூலம் பொருடகளை உற்பத்தி செய்து, அங்ககச் சான்றிதழ் பெற்று உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்வதோடு, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். இவ்வாறு இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், காய்கறிகள், பழங்கள் உயர் தரம் கொண்டவையாகவும், அதிகச் சுவை உடையதாகவும், நச்சுத்தன்மை அற்றதாகவும் இருப்பதால் சந்தை விலையைவிட சற்றுக் கூடுதல் விலை பெறவும் வாய்ப்பு உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் இயற்கை உரங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்ய, வெளிநாட்டவர்கள் குறிபபிட்ட இடத்தில் வாங்கிக்கொள்ள வசதியாக, வேளாண்மைத் துறை வாயிலாகத் தனிச் சந்தையை அரசு அமைக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிச் சந்தை ஏற்படுத்த உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட நாட்டார்மங்கலம், இரூர், குரூர் போன்ற இருபதுக்கும் மேற்பட்ட ஊராட்சிகளில, வெங்காயம் மிக அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. விலை மாற்றம் ஏற்படும்போது வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள, அதைச் சேமித்து வைப்பதற்கு வெங்காய சேமிப்புக் கிடங்கும், அரசின்மூலமாக அந்த வெங்காயத்தை விற்பனை செய்வதற்கு ஒரு கொள்முதல் நிலையமும் அமைத்து, வெங்காய விவசாயிகளை ஊக்குவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2007 ஏப்ரல் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பாரானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

முற்பகல் 9--55

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை உரம்கொண்டு வேளாண்மை செய்கிறபோது, அதிலே நல்ல தரமான பொருளும், அதேபோல நச்சுத்தன்மையும் இல்லாத நிலையிருந்தும், இரசாயன உரத்தை வைத்து உற்பத்தி செயகிறபோது, அவர்களுக்குக் கிடைக்கிற இலாபத்தைக் காட்டிலும் குறைந்த இலாபம் இருக்கின்ற காரணத்தினாலே விவசாயிகள் முன்வந்து இந்த வேளாண்மையைத் துவங்குவதற்குத் தயக்கம் காட்டிக் கொண்டிருக்கின்ற நிலையில், விவசாயிகளை ஆர்வப்படுத்துகின்ற வகையில் கூடுதலாக இதற்குத் தனியாக மானியம் வழங்க அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை உரங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருட்களுக்கு அங்ககச் சான்றிதழை மத்திய அரசாங்கத்தினுடைய APEDA மூலம் இந்தியா முழுவதும் 11 இடங்களிலே வழங்குகிறார்கள். இந்தச் சான்றிதழ் பெற்ற பொருட்களை, பழம், காயகறி வகைகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்திலேயும் இந்த அங்ககச் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று நடப்பு ஆண்டில் மத்திய சர்க்காருக்கு எழுதி அனுமதி பெற்று தேசிய தோட்டக் கலைத் துறைமூலம் நாம் இந்த அங்ககச் சான்றிதழ் வழங்கலாம் என்று அரசு முடிவு செய்திருப்பது தமிழக விவசாயிகளுக்குப் பயன்தரக்கூடியதாக இருக்கும். செயற்கை உரங்கள் போடுவதன் மூலம் மண் தன்மை கெட்டுவிடுகிறது. இவற்றை ஏற்றுமதி செய்கிறபோது இப்படி உற்பத்தி செய்கின்ற பொருட்களை வெளிநாட்டவர் வாங்குவது இல்லை. இயற்கை உரங்களின் மூலமும் உற்பத்தி செய்கின்ற பழம், காய்கறிகளைத்தான் அவர்கள் அனுமதிக்கின்றார்கள். ஆகவேதான், இந்த அங்ககச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.